சுருக்கம்

ஆட்சி எல்லை – திருவண்ணாமலை மாவட்டம் – போளூர், வந்தவாசி மற்றும் ஆரணி வட்டங்களை ஒருங்கிணைத்து பிரித்து புதிய சேத்துப்பட்டு வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [வ.நி.1(1)] துறை

அரசாணை (நிலை) எண்.120 நாள்: 10.03.2015

படிக்கவும்:

1. அரசாணை எண்.279, வருவாய்த் துறை, நாள் 09.06.2003.
2. அரசாணை (2டி) எண்.176, வருவாய்த் துறை, நாள் 15.06.2012.
3. மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மாவட்டம், கடித எண். ந.க. எம்2/44017/2010, நாள் 14.04.2013.
4. கூடுதல் தலைமைச் செயலர் (ம) வருவாய் நிருவாக ஆணையர் கடித எண். பணி6(4)/19822/2013, நாள் 16.07.2014 மற்றும் 3.11.2014.

---

ஆணை:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 11.08.14 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–இன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

**"திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள போளூர், ஆரணி மற்றும் வந்தவாசி வட்டங்களைச் சீரமைத்து சேத்துப்பட்டில் ஒரு புதிய வட்டம் உருவாக்கப்படும்."**

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின் அடிப்படையிலும் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி அமைக்கப்பட்ட உயர்மட்ட குழுவின் ஒப்புதலின்படியும் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் சேத்துப்பட்டில் ஒரு புதிய வட்டம் உருவாக்குவது தொடர்பாக தனது அறிக்கையில் கீழ்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளார்:-

- திருவண்ணாமலை மாவட்டம் போளூர், வந்தவாசி மற்றும் ஆரணி ஆகிய வட்டங்களில் இருந்து உள்வட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களை பிரித்து சேத்துப்பட்டு தலைமையிடமாக கொண்டு புதியதாக வட்டம் ஒன்று உருவாக்க வேண்டுமென்பது மேற்படி கிராமங்களில் உள்ள பொது மக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களது சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலான நீண்டநாள் கோரிக்கையாகும் எனவும், இக்கோரிக்கையின் பேரில் போளூர் வட்டத்தில் இருந்து மொடையூர் உள்வட்டத்தில் உள்ள 24 கிராமங்களில் 11 கிராமங்கள் மற்றும் தச்சாம்பாடி உள்வட்டத்தில் 14 கிராமங்களும், வந்தவாசி வட்டத்தில் இருந்து நெடுங்குணம் மற்றும் கொழப்பலூர் உள்வட்டங்களில் தலா 23 கிராமங்களும் மேலும் ஆரணி வட்டம் விண்ணமங்கலம் உள்வட்டத்திலிருந்து 5 கிராமங்கள் ஆக மொத்தம் 76 கிராமங்களை ஒன்றாக இணைத்து

சேத்துப்பட்டைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டமாக பிரிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

- மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் வடக்கு பகுதியில் போளூர் வட்டம், வடகிழக்கு திசையில் ஆரணி வட்டம், கிழக்கு திசையில் வந்தவாசி வட்டம் அமைந்துள்ளதாகவும், போளூர் வட்டத்தின் வடக்கு பகுதியில் ஆரணி வட்டம், தெற்கு பகுதியில் திருவண்ணாமலை வட்டம், கிழக்கு பகுதியில் வந்தவாசி வட்டம், மேற்கு பகுதியில் செங்கம் வட்டம் எல்லைகளாக அமைந்துள்ளதாகவும், மேலும் ஆரணி வட்டத்தின் வடக்கு பகுதியில் வேலூர் மாவட்டம், தெற்கு பகுதியில் போளூர் வட்டம், கிழக்கு பகுதியில் வந்தவாசி வட்டம், மேற்கு பகுதியில் போளூர் வட்டம் எல்லைகளாக அமைந்துள்ளதாகவும், வந்தவாசி வட்டத்தின் வடக்கு பகுதியில் செய்யார் வட்டம், தெற்கு பகுதியில் விழுப்புரம் மாவட்டம், கிழக்கு பகுதியில் காஞ்சிபுரம் மாவட்டம், மேற்கு பகுதியில் போளூர் வட்டம் எல்லைகளாக அமைந்துள்ளதாகவும், மேற்கண்ட வட்டங்களில் இருந்து கீழ்க்கண்ட காரணங்களுக்காக புதிய வட்டத்தினை உருவாக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

- போளூர் வட்டத்தில் தற்போது உள்ள மக்கள் தொகை 3,17,507 ஆகும் எனவும், இவ்வட்டத்தில் 136 வருவாய் கிராமங்களும், 6 உள்வட்டங்களும், 2 மண்டலங்களும், 100 கிராம பஞ்சாயத்துக்களும், 3 பேரூராட்சிகளும் அமைந்துள்ளதாகவும், இவ்வட்ட தலைமையிடத்திலிருந்து மிகவும் தூரத்தில் உள்ள கிராமம் இந்திரவனம் எனவும், போளூரிலிருந்து இதன் தொலைவு 34 கி.மீ ஆகும் எனவும், புதியதாக உருவாக்கப்படவுள்ள சேத்துப்பட்டு வட்டத்திலிருந்து இவ்வூர் 9 கி.மீ தூரமாகும் எனவும், எனவே போளூர் வட்டத்தில் உள்ள 6 உள்வட்டங்களில் 2 உள்வட்டங்களை மட்டும் பிரித்து புதியதாக உருவாக்க உள்ள சேத்துப்பட்டு வட்டத்தில் சேர்க்கலாம்.

- மொடையூர் உள்வட்டத்தில் உள்ள 24 கிராமங்களில் 13 கிராமங்களை மட்டும் கொண்டு மொடையூர் உள்வட்டமாகவும், இவ்வுள்வட்டத்தினை போளூர் வட்டத்திலேயே நிறுத்திக் கொண்டும், மீதம் உள்ள 11 கிராமங்களையும் ஆரணி வட்டம் விண்ணமங்கலம் உள்வட்டத்திலிருந்து 5 கிராமங்களையும் சேர்த்து 11 + 5 = 16 தேவிகாபுரம் புதிய உள்வட்டமாக உருவாக்கி சேத்துப்பட்டு வட்டத்தில் சேர்க்கலாம் எனவும், மேலும் தச்சாம்பாடி உள்வட்டத்தினை முழுவதையும் சேத்துப்பட்டு வட்டத்தில் சேர்க்கலாம்.

- வந்தவாசி வட்டத்தில் தற்போது உள்ள மக்கள் தொகை 3,36,082 எனவும், இவ்வட்டத்தில் 207 வருவாய் கிராமங்களும், 10 உள்வட்டங்களும், 3 மண்டலங்களும், 179 கிராம பஞ்சாயத்துகளும், 1 நகராட்சியும், 2 பேரூராட்சிகளும், 3 ஊராட்சி ஒன்றியங்களும் அமைந்துள்ளதாகவும், இவ்வட்ட தலைமையிடத்தில் இருந்து மிகவும் தூரத்தில் உள்ள கிராமம் மேலானூர் எனவும், மேற்படி மேலானூரில் இருந்து வந்தவாசி தலைமையிடத்திற்கு 36 கி.மீ தூரம் எனவும், எனவே வந்தவாசி வட்டத்தில் உள்ள 10 உள்வட்டங்களில் இருந்து 2 உள்வட்டங்களை மட்டும் பிரித்து புதியதாக உருவாக்க உள்ள சேத்துப்பட்டு வட்டத்தில் சேர்க்கலாம்.

- நெடுங்குணம் உள்வட்டத்தில் உள்ள 23 கிராமங்களும் மற்றும் கொழப்பலூர் உள்வட்டத்தில் இருந்து 23 கிராமங்களும் ஆக மொத்தம் 46 கிராமங்களும் புதியதாக

உருவாக்கப்படவுள்ள சேத்துப்பட்டு வட்டத்தில் சேர்க்கப்படுவதாக தெரிவித்துள்ளார். ஆரணி வட்டத்தில் தற்போது உள்ள மக்கள் தொகை 2,94,207 ஆகும் எனவும், இவ்வட்டத்தில் 56 வருவாய் கிராமங்களும் 6 உள்வட்டங்களும், 2 மண்டலங்களும், 75 கிராம பஞ்சாயத்துக்களும், 1 நகராட்சியும், ஒரு பேரூராட்சியும், 2 ஊராட்சி ஒன்றியங்களும் அமைந்துள்ளதாகவும், இவ்வட்ட தலைமையிடத்தில் இருந்து மிகவும் தூரத்தில் உள்ள கிராமம் தேவிகாபுரம் எனவும், தேவிகாபுரத்திலிருந்து ஆரணி தலைமையிடத்திற்கு 21 கி.மீ தூரம் எனவும், எனவே ஆரணி வட்டத்தில் 6 உள்வட்டங்கள் உள்ளதாகவும், இதில் விண்ணமங்கலம் உள்வட்டத்தில் உள்ள 9 கிராமங்களில் 4 கிராமங்களை ஆரணி வட்டத்தில் உள்ள ஆரணி உள்வட்டத்துடன் இணைத்தும் மீதம் உள்ள 5 கிராமங்களை புதியதாக உருவாக்கப்படவுள்ள சேத்துப்பட்டு வட்டத்தில் புதியதாக உருவாக்கப்படவுள்ள தேவிகாபுரம் உள்வட்டத்துடன் சேர்க்கப்படுவதாகவும், மேற்படி விண்ணமங்கலம் உள்வட்டத்திலுள்ள 9 கிராமங்களை ஆரணி உள்வட்டத்தில் 4 கிராமங்களையும் தேவிகாபுரம் உள்வட்டத்தில் 5 கிராமங்களையும் இணைப்பதன் மூலம் விண்ணமங்கலம் உள்வட்டம் என்ற உள்வட்டம் ஆரணி வட்டத்திலிருந்து நீக்கப்படுகிறது. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் தனதறிக்கையில் திருத்திய ஆட்சி எல்லைப் பட்டியல் மற்றும் பணியாளர் விவரங்களை தெரிவித்துள்ளார். அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | வட்டத்தின் பெயர் | உள்வட்டத்தின் பெயர் | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | உத்தேச சேத்துப்பட்டு வட்டத்திற்கு மாற்றம் செய்யப்படும் கிராமங்களின் எண்ணிக்கை | எஞ்சிய கிராமங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | போளூர் | மொடையூர் | 24 | 11 | 13 | 13 கிராமங்கள் கொண்ட மொடையூர் உள்வட்டமாக திகழும். போளூர் வட்டத்திலேயே தொடர்ந்து இருக்கும் 11 கிராமங்கள் புதியதாக உருவாக்கப்படும் தேவிகாபுரம் உள்வட்டத்துடன் இணைக்கப்படுகிறது. |
| 2 | | தச்சாம்பாடி | 14 | 14 | 0 | முழுவதும் சேத்துப்பட்டு வட்டத்திற்கு மாற்றம் |
| 3 | ஆரணி | விண்ண–மங்கலம் | 9 | 5 | 4 | எஞ்சிய 4 கிராமங்களும் ஆரணி நகர உள்வட்டத்துடன் இணைக்கப்படுகிறது. இந்த உள்வட்டம் நீக்கப்படுகிறது. மேலும் போளூர் வட்டம் மொடையூர் உள்வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட 11 கிராமங்கள் மற்றும் விண்ணமங்கலம் உள்வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட 5 கிராமங்கள் ஆக மொத்தம் 16 கிராமங்களைக் கொண்டு புதிய தேவிகாபுரம் உள்வட்டம் உருவாக்கப்படுகிறது. |
| 4 | வந்தவாசி | நெடுங்குணம் | 23 | 23 | 0 | முழுவதும் சேத்துப்பட்டு வட்டத்திற்கு மாற்றம் |
| 5 | | கொழப்பலூர் | 23 | 23 | 0 | முழுவதும் சேத்துப்பட்டு வட்டத்திற்கு மாற்றம் |

த.பி.பா

மேற்கண்ட விவரப்படி கீழ்க்கண்ட 4 உள்வட்டங்கள் புதிய சேத்துப்பட்டு வட்டத்தில் அமைகிறது.

1. தச்சாம்பாடி – 14 கிராமங்கள்
2. தேவிகாபுரம் – 16 கிராமங்கள்
3. நெடுங்குணம் – 23 கிராமங்கள்
4. கொழப்பலூார் – 23 கிராமங்கள்

--

மொத்த கிராமங்கள் 76

--

| வ. எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | கோரிக்கையின்படி | | | | | | | அரசாணை எண்.279, வ.து. நாள் 9.6.2003–ன் படி குறித்த நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தற்போதய வட்டம் | | | உத்தேசிக்கப்–பட்டுள்ள சேத்துப்பட்டு வட்டம் | எஞ்சிய வட்டம் | | | |
| 1 | தலைமையிடம் | போளூர் | ஆரணி | வந்தவாசி | சேத்துப்பட்டு | போளூர் | ஆரணி | வந்தவாசி | |
| 2 | பரப்பளவு (சதுர கி.மி) | 762.93 | 447.34 | 878.69 | 311.67 | 646.20 | 409.22 | 724.17 | குறைந்தளவு 250 ச.கி.மீ. முதல் அதிகளவு 2000 ச.கி.மீ. |
| 3 | மக்கள்தொகை | 317507 | 294207 | 336082 | 146806 | 251655 | 275256 | 274079 | குறைந்தளவு 1,00,000 முதல் அதிகளவு 5,50,000 |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருவண்ணா மலை | செய்யார் | செய்யார் | செய்யார் | திருவண் ணாமலை | செய்யார் | செய்யார் | |
| 5 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | போளூர் | ஆரணி | வந்தவாசி போளூர் | போளூர் (பகுதி) ஆரணி வந்தவாசி (பகுதி) | போளூர் (பகுதி) | ஆரணி | வந்தவாசி (பகுதி) | |
| 6 | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | போளூர் ஆரணி | ஆரணி | வந்தவாசி ஆரணி | ஆரணி | ஆரணி | ஆரணி | ஆரணி | |
| 7 | நகராட்சிகளின் எண்ணிக்கை பெயருடன் | – | ஆரணி 1 | வந்தவாசி 1 | – | – | ஆரணி 1 | வந்தவாசி 1 | |
| 8 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | போளூர் சேத்துப்பட்டு | ஆரணி ஆரணி (மேற்கு) | வந்தவாசி பெரண–மல்லூார் தெள்ளார் | சேத்துப்பட்டு ஆரணி மேற்கு (பகுதி) பெரணமல்லூார் (பகுதி) | போளூர் | ஆரணி ஆரணி (மேற்கு) (பகுதி) | வந்தவாசி பெரண–மல்லூார் தெள்ளார் (பகுதி) | 2 அல்லது 3 ஊராட்சி ஒன்றியங்கள் |
| 9 | சிறப்பு பேரூராட்சிகளின் எண்ணிக்கை | களம்பூர் சேத்துப்பட்டு | கண்ணம ங்கலம் | பெரண–மல்லூார் தேசூர் | சேத்துப்பட்டு | களம்பூர் போளூர் | கண்ண மங்கலம் | பெரண – மல்லூார் தேசூர் | |
| 10 | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 6 | 6 | 10 | 4 | 5 | 5 | 8 | |

த.பி.பா

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 136 | 54 | 207 | 76 | 111 | 49 | 161 | குறைந்த அளவு 36 கிராமங்கள் |
| 12 | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 100 | 75 | 179 | 72 | 77 | 69 | 136 | |
| 13 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமம் பெயர் | இந்திர வாணம் 34 கி.மீ | தேவிகாபுரம் 21 கி.மீ | மேலாரூர் 36 கி.மீ | இந்திரவாணம் 9 கி.மீ<br>தேவிகாபுரம் 12 கி.மீ<br>மேலாரூர் 20 கி.மீ | - | - | - | - |

3. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து அளவுகோல்களும் பூர்த்தி செய்வதால், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையினை ஏற்று, போளூர், வந்தவாசி மற்றும் ஆரணி வட்டங்களை ஒருங்கிணைத்து பிரித்து புதிய சேத்துப்பட்டு வட்டம் உருவாக்கவும், மேலும் புதியதாக உருவாக்கப்படவுள்ள சேத்துப்பட்டு வட்டத்திற்கு 47 பணியிடங்கள் வருவாய்த் துறைக்கும், 9 பணியிடங்கள் நில அளவைத் துறைக்கும் ஆகமொத்தம் 56 பணியிடங்கள் அனுமதிக்குமாறும், மேலும் தொடரும் செலவினமாக ரூ.71,36,096/-ம் தொடராச் செலவினமாக ரூ.16,73,000/-ம் நிதி ஒப்பளிப்பு வழங்க கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

I) திருவண்ணாமலை மாவட்டம், போளூர், வந்தவாசி மற்றும் ஆரணி வட்டங்களை சீரமைத்து புதிய சேத்துப்பட்டு வட்டம் உருவாக்கப்படுகிறது.

II) போளூர் வட்டம், மொடையூர் உள்வட்டத்திலிருந்து 11 கிராமங்கள் மற்றும் விண்ணமங்கலம் உள்வட்டத்திலிருந்து 5 கிராமங்களைச் சேர்த்து தேவிகாபுரம் என்ற குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

III) புதியதாக உருவாக்கப்படும் சேத்துப்பட்டு வட்டத்திற்கு கீழ்கண்டவாறு 34 பணியிடங்கள் மறுபரவலமர்த்தல் மூலமும் 11 பணியிடங்கள் புதியதாக தோற்றுவித்தும் ஆக மொத்தம் 45 பணியிடங்கள் உருவாக்கவும் ஒப்புதல் வழங்கப்படுகிறது:-

த.பி.பா

<u>பொதுப்பிரிவு</u>

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | மொத்த பணியிடங்கள் | | | நிறுத்திவைக்க வேண்டிய பணியிடங்கள் | | | மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள் | புதிதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | மொத்த பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | போளூர் | வந்தவாசி | ஆரணி | போளூர் | வந்தவாசி | ஆரணி | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1. | வட்டாட்சியர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 2. | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 3. | மண்டல துணை வட்டாட்சியர் | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 1 | -- | 1 |
| 4. | உதவியாளர்<br>*6 மிகைப்பணியிடங்கள் | 6 | 7 | 6 | 3 | 5 | 3 | 2 | -- | 2 |
| 5. | வருவாய் ஆய்வாளர் | 6 | 10 | 6 | 5 | 8 | 5 | 4 | -- | 4 |
| 6. | இளநிலை உதவியாளர்<br>** 15 மிகைப்பணியிடங்கள் | 8 | 8 | 8 | 2 | 3 | 2 | 2 | -- | 2 |
| 7. | தட்டச்சர்<br>*** 2 மிகைப்பணியிடங்கள் | 2 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | -- | 1 |
| 8. | பதிவுறு எழுத்தர்<br>#2 மிகைப்பணியிடங்கள் | 2 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | -- | 1 |
| 9. | அலுவலக உதவியாளர்<br>##4 மிகைப்பணியிடங்கள் | 10 | 15 | 9 | 7 | 10 | 7 | 6 | -- | 6 |
| 10. | இரவுக் காவலர் | 1 | 1 | -- | 1 | 1 | -- | -- | 1 | 1 |
| 11. | மசால்சி | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 12. | ஓட்டுனர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| | **மொத்தம்** | **41** | **52** | **39** | **26** | **35** | **25** | **17** | **5** | **22** |

** 6 உதவியாளர் பணியிடங்கள் மிகைப்பணியிடமாக உள்ளன. இந்த 6 மிகைப் பணியிடங்களில் சமூக பாதுகாப்புத் திட்ட பிரிவு, தேர்தல் பிரிவு, சிறப்பு திட்ட அமலாக்க பிரிவு மற்றும் வட்ட வழங்கல் பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு தலா 1 பணியிடம் வீதம் மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும். மீதமுள்ள 2 மிகைப் பணியிடம் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.*

*** 15 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் மிகைப்பணியிடமாக உள்ளன. இந்த 15 மிகைப் பணியிடங்களில் 1 பணியிடம் வட்ட வழங்கல் பிரிவுக்கு மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும். மீதமுள்ள 14 பணியிடங்கள் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.*

**** 2 தட்டச்சர் பணியிடங்கள் மிகைப்பணியிடமாக உள்ளன. இந்த 2 மிகைப் பணியிடங்களில், ஒரு பணியிடம் சமூக பாதுகாப்புத் திட்ட பிரிவிற்கு, மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும். மீதமுள்ள 1 மிகைப் பணியிடம் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.*

*# 2 பதிவுறு எழுத்தர் பணியிடங்கள் மிகைப்பணியிடமாக உள்ளன. இந்த இரு மிகைப் பணியிடங்களும் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.*

*## 4 அலுவலக உதவியாளர் பணியிடங்கள் மிகைப்பணியிடமாக உள்ளன. இந்த 4 மிகைப் பணியிடங்களில் சமூக பாதுகாப்புத் திட்ட பிரிவு, சேத்துப்பட்டு மற்றும் வந்தவாசி வட்டங்களுக்கு தலா 1 பணியிடமும், வட்ட வழங்கல் பிரிவு சேத்துப்பட்டு வட்டத்திற்கு 1 பணியிடமும் மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும். மீதமுள்ள 1 மிகைப் பணியிடம் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.*

**த.பி.பா**

சமூகபாதுகாப்புத் திட்டம்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சிறப்பு வட்டாட்சியர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 2. | துணை வட்டாட்சியர் #3 மிகைப்பணியிடங்கள் | 1 | 1 | 1 | -- | -- | -- | -- | -- | -- |
| 3. | வருவாய் உதவியாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 4. | தட்டச்சர் | -- | -- | -- | -- | -- | -- | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 5. | ஓட்டுநர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 6. | அலுவலக உதவியாளர் | -- | -- | -- | -- | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| | **மொத்தம்** | **4** | **4** | **4** | **3** | **4** | **3** | **3** | **2** | **5** |

*# 3 துணை வட்டாட்சியர் பணியிடங்கள் மிகைப்பணியிடமாக உள்ளன. இந்த 3 மிகைப் பணியிடங்களில் தேர்தல் பிரிவு, சிறப்பு திட்ட அமலாக்க பிரிவு மற்றும் வட்ட வழங்கல் பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு தலா 1 பணியிடம் வீதம் மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும்.*

தேர்தல் பிரிவு

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | துணை வட்டாட்சியர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 (சமூகபாதுகாப்புத் திட்ட பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 2 | உதவியாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| | மொத்தம் | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | -- | 2 |

த.பி.பா

சிறப்புத் திட்ட அமலாக்கம்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | துணை வட்டாட்சியர் | -- | -- | -- | -- | -- | -- | 1 (சமூகபாதுகாப்புத் திட்ட பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 2 | உதவியாளர் | -- | -- | -- | -- | -- | -- | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 3 | கணினி இயக்குபவர் (தொகுப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.7500/—வீதம்) | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 1 |
| | மொத்தம் | -- | -- | -- | -- | -- | -- | 2 | 1 | 3 |

வட்ட வழங்கல் பிரிவு

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 (சமூகபாதுகாப்புத் திட்ட பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 2 | உதவியாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 4 | தனிவருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) #2 மிகைப் பணியிடங்கள் | 2 | 3 | 2 | 1 | 2 | 1 | 1 | -- | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| | மொத்தம் | 6 | 7 | 6 | 5 | 6 | 5 | 5 | -- | 5 |

# 2 தனிவருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் (இளநிலை உதவியாளர் நிலை) மிகைப்பணியிடமாக உள்ளன. இந்த இரு மிகைப் பணியிடங்களும் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

த.பி.பா

நில அளவை பிரிவு

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மண்டல துணை ஆய்வாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 3 | முதுநிலை வரைவாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 1 |
| 4 | புலஉதவியாளர் | 1 | 3 | 1 | 1 | 2 | 1 | 1 | -- | 1 |
| 5 | குறுவட்ட அளவர் | 6 | 10 | 6 | 5 | 8 | 5 | 4 | -- | 4 |
| | மொத்தம் | 10 | 16 | 10 | 9 | 13 | 9 | 5 | 3 | 8 |

சேத்துப்பட்டு வட்டத்திற்கான மொத்த பணியிடங்கள்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு | 41 | 52 | 39 | 26 | 35 | 25 | 17 | 5 | 22 |
| 2 | சமூகப் பாதுகாப்பு திட்டம் | 4 | 4 | 4 | 3 | 4 | 3 | 3 | 2 | 5 |
| 3 | தேர்தல் பிரிவு | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | -- | 2 |
| 4 | சிறப்பு திட்ட அமலாக்கம் | -- | -- | -- | -- | -- | -- | 2 | 1 | 3 |
| 5 | வட்ட வழங்கல் பிரிவு | 6 | 7 | 6 | 5 | 6 | 5 | 5 | -- | 5 |
| 6 | நில அளவை பிரிவு | 10 | 16 | 10 | 9 | 13 | 9 | 5 | 3 | 8 |
| | மொத்தம் | **63** | **81** | **61** | **45** | **60** | **44** | **34** | **11** | **45** |

மிகைப்பணியிடங்கள்

| பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| 1. உதவியாளர் | 2 |
| 2. இளநிலை உதவியாளர் | 14 |
| 3. தட்டச்சர் | 1 |
| 4. பதிவுறு எழுத்தர் | 2 |
| 5. அலுவலக உதவியாளர் | 1 |
| சிறப்பு வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | 2 |
| மொத்தம் | 22 |

*மேலே குறிப்பிட்டுள்ள 22 மிகைப் பணியிடங்களும் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.*

IV) புதியதாக உருவாக்கப்படும் சேத்துப்பட்டு வட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு ஏற்படும் தொடரும் செலவினம் மற்றும் தொடராச் செலவினம் கீழ்கண்டவாறு ஒப்பளிக்கப்படுகிறது:—

அ) தொடரும் செலவினம்

| வ. எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள்(திருத்திய ஊதிய விகிதப்படி) | 25,85,400 |
| 2 | தாலுக்கா (அலுவலக கட்டிட வாடகை) | 1,44,000 |
| 3 | எரிபொருள் (டீசல்) (160X50X12X2) | 1,92,000 |
| 4 | மின்சார கட்டணம் | 1,20,000 |
| 5 | தொலைபேசிக் கட்டணம் | 15,000 |
| | மொத்தம் | 30,56,400 |

ஆ) தொடரா செலவினங்கள்

| வ. எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | ஈப்பு | 11,12,000 |
| 2) | கணினி | 75,000 |
| 3) | பிரிண்டர் | 25,000 |
| 4) | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 65,000 |
| 5) | பேக்ஸ் | 10,000 |
| 6) | தளவாடங்கள் | 2,00,000 |
| 7) | தீயணைப்பான் | 10,000 |
| 8) | தொலைபேசி இணைப்பு | 3,000 |
| 9) | குளிர்சாதனப்பெட்டி | 25,000 |
| | மொத்தம் | 15,25,000 |

V) தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு பணிக்காலம் ஒரு ஆண்டு முடிவதற்கு முன்பாக பணி இடைவெளி (Break in service) கொடுக்கப்படவேண்டும்.

5. மேலே பத்தி 4(iv)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்க வேண்டும்.

(I) பணியாளர் சம்பளங்கள்

(i) வருவாய் பணியிடங்கள் ரூ.1,000/-

"2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –I. திட்டத்தில் சேராதது –AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்"
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(ii) நில அளவைப் பணியிடங்கள் ரூ.1,000/–
2029–00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – I. திட்டத்தில் சேராதது – AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2029 00 102 AF 0105)

(iii) குடிமைப் பொருள் பணியிடங்கள் ரூ.1,000/–
3456–00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – I. திட்டத்தில் சேராதது AB மாவட்ட பணியாளரமைப்பு – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 3456 00 001 AB 0108)

(II) 2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – I. திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள்

(அ) 05 அலுவலகச் செலவுகள் – 01 தொலைபேசிக் கட்டணங்கள் ரூ.18,000/–
தொடரும் செலவினம் ரூ.15,000/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.3,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0513)

(ஆ) 05 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/–
தொடரும் செலவினம்
(த.தொ.கு 2053 00 094 AB 0531)

(இ) 05 05 அறைகலன்கள் ரூ.2,00,000/–
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AB 0559)

(ஈ) 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை ரூ.1,44,000/–
தொடரும் செலவினம்
(த.தொ.கு 2053 00 094 AB 0611)

(உ) 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் ரூ.1,10,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 1914)

(ஊ) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.11,12,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 2119)

(எ) 45 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.1,92,000/–
தொடரும் செலவினம்
(த.தொ.கு 2053 00 094 AB 4500)

(ஏ) 76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.1,00,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 7614)

த.பி.பா

6. மேலே பத்தி 4(iv)–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணி குறித்த செலவினமாகும் (New Instrument of Services). இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினத்திற்கு தேவைப்படும் நிதி முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து நடப்பு ஆண்டிற்கு தேவைப்படும் நிதியை முன்பணமாக பெறுவதற்கு உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2014–2015 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு செயற்குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதித் (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வட்டம் 10.03.2015–ஆம் நாள் முதல் செயல்படும்.

8. புதிய சேத்துப்பட்டு வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 4–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.13792/ மை.ம.ஆ.பி./15, நாள் 05.03.2015–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2681 (இரண்டாயிரத்து அறுநூற்று எண்பத்து ஒன்று).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 600 079.
(அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
கூடுதல் தலைமைச் செயலாளர்//நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/நிலச் சீர்திருத்த ஆணையர், சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5.
ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை.
மாவட்ட கருவூல அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–9.
மாநில கணக்காயர் (RAO) சென்னை–9.

த.பி.பா

இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்துத் துறை தலைவர்கள் / அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை–9.
ஆணையர், கருவூலக்கணக்கு துறை, சென்னை–15.

<u>நகல்:</u>
மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், வருவாய்த்துறை அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதித்(வ.செ.பொது–I/வ.செ.பொது–II/வருவாய்/கக–3/கூஉ(ம)நுபா/பொதுப்பணி-I/மை.மஆபி) துறை, சென்னை–9.
இகோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 11.3.15.

## இணைப்பு

### அரசாணை (நிலை) எண்.120, வருவாய்த்துறை, நாள் 10.03.2015
### அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள போளூர், வந்தவாசி மற்றும் ஆரணி வட்டங்களை ஒருங்கிணைத்து பிரித்து 2015 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 10–ஆம் நாளிலிருந்து சேத்துப்பட்டை தலைமையிடமாக கொண்டு புதிதாக வட்டம் ஒன்று கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதியதாக உருவாக்கப்படும் சேத்துப்பட்டு வட்டத்தில் உள்ளடக்கும் 1. தேவிகாபுரம், 2. தச்சாம்பாடி, 3. நெடுங்குணம், 4. கொழப்பலூர் குறுவட்டங்கள் மீது தற்போது போளூர், வந்தவாசி மற்றும் ஆரணி வட்டாட்சியர்களால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி சேத்துப்பட்டு வட்டாட்சியரால் 2015–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 10–ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

**1. தேவிகாபுரம் உள்வட்டம்**

| வ.எண். | கிராமக் குறியீடு | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | 121 | மன்சுராபாத் |
| 2. | 122 | பெரணம்பாக்கம் |
| 3. | 141 | ஒதலவாடி |
| 4. | 142 | மோதனபாளையம் |
| 5. | 143 | தும்பூர் |
| 6. | 144 | வீரசம்பனூர் |
| 7. | 145 | நரசிங்கபுரம் |
| 8. | 147 | ஆத்துறை |
| 9. | 148 | சித்தாத்துறை |
| 10. | 151 | கொளக்கரவாடி |
| 11. | 185 | ஊத்தூர் |
| 12. | 47 | தெள்ளூர் |
| 13. | 48 | முருக்கனந்தல் |
| 14. | 49 | நாச்சாபுரம் |
| 15. | 50 | முருகமங்கலம் |
| 16. | 51 | தேவிகாபுரம் |

த.பி.பா

2. தச்சாம்பாடி உள்வட்டம்

| | | |
|---|---|---|
| 17. | 149 | செய்யானந்தல் |
| 18. | 150 | தச்சாம்பாடி |
| 19. | 152 | நம்பேடு |
| 20. | 153 | தேவிமங்கலம் |
| 21. | 154 | இடையங்குளத்தூர் |
| 22. | 155 | சேத்துப்பட்டு |
| 23. | 156 | கண்ணனூர் |
| 24. | 157 | மருத்துவாம்பாடி |
| 25. | 158 | உலகம்பட்டு |
| 26. | 159 | கொத்தந்தவாடி |
| 27. | 160 | அப்பேடு |
| 28. | 161 | இந்திரவனம் |
| 29. | 186 | செவரப்பூண்டி |
| 30. | 187 | கெங்கைசூடாமணி |

3. நெடுங்குணம் உள்வட்டம்

| | | |
|---|---|---|
| 31. | 053 | கல்யாணபுரம் |
| 32. | 024 | கோட்டுபாக்கம் |
| 33. | 025 | மேலச்சேரி |
| 34. | 026 | அரசம்பட்டு |
| 35. | 018 | மேல்நந்தியாம்பாடி |
| 36. | 017 | வேப்பம்பட்டு |
| 37. | 016 | மேல்வில்லிவளம் |
| 38. | 055 | மடம் |
| 39. | 022 | இசாகொளத்தூர் |
| 40. | 023 | நல்லடிசேனை |
| 41. | 019 | வயலூர் |
| 42. | 020 | பூங்குணம் |
| 43. | 012 | தென்கடப்பதாங்கல் |
| 44. | 013 | பெரணபாக்கம் |
| 45. | 014 | மோரகனியனூர் |
| 46. | 015 | நெடுங்குணம் |
| 47. | 028 | மேலதாங்கல் |
| 48. | 029 | விசாமங்கலம் |

த.பி.பா

| | | |
|---|---|---|
| 49. | 027 | ஜெகன்நாதபுரம் |
| 50. | 051 | கோழிபுலியூர் |
| 51. | 052 | ஏந்தல் |
| 52. | 054 | ஆளியூர் |
| 53. | 056 | சோலை அருகாவூர் |

**4.** கொழப்பலூர் உள்வட்டம்

| | | |
|---|---|---|
| 54. | 011 | மேலப்பூண்டி |
| 55. | 030 | கோணாமங்கலம் |
| 56. | 031 | தெள்ளாரம்பட்டு |
| 57. | 033 | நமத்தேடு |
| 58. | 001 | மேலானூர் |
| 59. | 006 | கோனையூர் |
| 60. | 002 | சூத்திராகாட்டேரி |
| 61. | 003 | அன்மருந்தை |
| 62. | 004 | நரியம்பாடி |
| 63. | 005 | விநாயகபுரம் |
| 64. | 007 | கெங்காபுரம் |
| 65. | 032 | மரக்குணம் |
| 66. | 042 | அல்லியந்தல் |
| 67. | 034 | இமாபுரம் |
| 68. | 035 | நாராயணமங்கலம் |
| 69. | 036 | மேல்சாத்தமங்கலம் |
| 70. | 040 | கட்ட மங்கலம் |
| 71. | 041 | சந்திரம்பாடி |
| 72. | 037 | ஆவணியாபுரம் |
| 73. | 038 | சோழவரம் |
| 74. | 009 | செம்மாம்பாடி |
| 75. | 010 | அனாதிமங்கலம் |
| 76. | 008 | கொழப்பலூர் |

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர். 11.3.15.
11/3/15